இதழ் - ௫௰௬

ISSN 2581-9712

உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

திருவள்ளுவராண்டு 2051

30.12.2020

மாணிக்கவாசகர் திருக்கோவையாரில் உடன்போக்கு அதிகாரத்துறைகள் ஐம்பத்தாறு!

தேனியற்றும் தீஞ்சுவையைத் திரட்டி வரும் உலகத்தமிழிதழ் ஐம்பத்தாறு!

உள்ளடக்கம்

04 மாண்புமிகு அமைச்சர் உரை

05 ஆசிரியம்!

07 பண்டித நேருவும் பண்டைத் தமிழும்!

08 ஏழு கடலுக்கு அப்பால்!

09 அவ்வப்போது!

10 புத்தாண்டுக் கொண்டாட்டம்!

12 மறைமலையடிகளார் மாட்சி!

13 தேன் துளி!

14 பிரான்சு நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சி!

15 திருவருட்பா முதலைந்து திருமுறைகள்!

16 பாரதியின் கவிதைக்கலை சில கருத்துகள்!

17 கார்த்திகை விளக்கீடு!

18 தமிழக அரசின் விருதுப்பட்டியல்!

19 மதுரை காமராசர் பல்கலைக்கழகம்!

உள்ளடக்கம்

20
சிலப்பதிகாரம்–ஆங்கிலம்!

21
குழந்தை இலக்கியம்!

22
Everlasting Tradition !

23
பதிகங்களைப் படியுங்கள் !

25
பூமழை !

26
அங்கிங்கெனாதபடி இங்கிலாந்தில்...

28
நாடக வேந்தர் சேக்சுபியரின் மொழியாக்கப் பட்டியல்!

29
அறிவரசன் துணை அகராதி!

இணைய தமிழ்ச் சங்க விழா!

மாண்புமிகு அமைச்சர் உரை - 10.10.2018

திரு.க.பாண்டியராசன்
மாண்புமிகு தமிழாட்சி மொழி, தமிழ்ப்பண்பாட்டுத்துறை மற்றும்
தொல்லியல் துறை அமைச்சர்

"1995 அக்டோபரில் சிங்கப்பூர் அதிபர் திரு.ஓங் டாங்சாங் தொடங்கி வைத்த (Journey Words home and nation anthology of Singapore 1984 - 1995) என்கிற நான்கு தேசிய மொழிக் கவிதை களுக்கான வலையகத்தில்தான் முதன் முதலில் தமிழ் இணையம் பதிவேற்றம் செய்யப்பட்டது." இதைச் சாதித்த (Internet Research and Development Unit) குழுவில் திரு.கோவிந்த சாமியும் அவரோடு இணைந்து பணியாற்றிய டாக்டர் டான்டின் வி.லியோஸ் மற்றும் கோக்யாங் ஆகிய இரு வல்லுநர்களும் முதல் தமிழ்ப் பக்கத்தை வலையேற்றினர். இவர்களுக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளது.

இணையம் வந்த பிறகு தான் தமிழ்த் தகவல்கள் கடல் கடந்து நாடுகளுக் கிடையே உடனுக்குடன் பரவின. எழுத்துருச் சிக்கலும், தட்டச்சுப் பலகைச் சிக்கலும் தொடக்கத்தில் இருந்தன. இதனால் பல தமிழ் மென் பொருள்கள் உலகம் முழுவதும் தமிழர் களாலும், தமிழ் ஆர்வலர்களாலும் உருவாக்கப்பட்டன.

தமிழ்த் தட்டச்சுப் பலகை குறித்த சிக்கல் ஓரளவு தீர்ந்த நிலையிலும் எழுத்துருச் சிக்கல் இருந்து வந்தது. பொறியாளர்களின் முயற்சியால் ஒருங்குறி (Unicode) நுட்பத்தில் தமிழ்த் தட்டச்சுக்கு வழி பிறந்தது. அச்சு இதழ்கள் போல் தமிழ் மின்னிதழ்கள் எண்ணற்றவை தோன்றின.



தமிழ்ப் படைப்புகளை உலக அளவில் அறிமுகப்படுத்துவதில் வலைப்பூக்கள் பெரும் பங்காற்றுகின்றன. செய்திகளையும் வலைப்பபூக்கள் முந்தித் தருகின்றன. கட்டற்ற செய்திகளை வெளிப்படுத்தும் தன்னுரிமையை வலைப்பூக்கள் வழங்கு வதால் பலர் எழுத முன் வருகின்றனர்.

வளரும்...

மார்கழிப்பாவை!

மார்கழி பிறந்துள்ளது. மகளிர் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி அழைத்துச் சென்று, நீராடி இறைவனைப் போற்றிப் பாடுவது என்ற மரபில் மாணிக்கவாசகர் மணிமொழியாக வழங்கிய திருவெம்பாவையும், ஆண்டாள் நாச்சியார் திருமொழியாக அருளிய திருப்பாவையும் ஆகும். ஆண்டாள் திருமாலை அருங்காதல் பூண்டாள், பொழிந்தாள் திருப்பாவை என வையங்காத்த பெருமான் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் தன் திருவெம்பாவையைத் திருவண்ணாமலையில் பாடியதாகக் கூறப் படுகிறது.

"குளங்கள் நீர் நிறைந்திருக்கும் அறுவடை மாதம் மார்கழி ;
மாலவன் சொன்னது மாதங்களில் நான் மார்கழியே !
மாதங்களில் இது தனி மாதம் இந்த மார்கழி மாதம் பிரமாதம்"

எனக் கவியரசர் கண்ணதாசன் பாடினார். திருவாதவூர் அடிகள் பாடிய திருவெம்பாவையில், முதல் எட்டுப்பாடல்களில் இளமகளிர் விடியும் முன்னே எழுந்து ஒருவரை ஒருவர் நீராட அழைப்பது போன்று இருக்கும்.

இப்பாடல்களில் மகளிர் நீராடும் அழகும் ஒரு பாட்டில் மழை வேண்டிப் பாடுவது போன்றும், மற்றைய பாடல்களில் இறைவன் புகழை எடுத்துப் பாடி, இறுதியில் இந்நீராட்டு மார்கழி நீராட்டு என்ற கருத்தையும் உள்ளடக்கிப் பாடினார் .உண்மை நெறியை உணரல் கொஞ்சமாவது மெய் வருத்தம் தேவை என்ற நோக்கம் அடிப்படையாக அனைத்துச் சமய நம்பிக்கை கொண்டவர்களிடம் இருப்பதைக் காணலாம். ஆண்டாளின் பாவை நோன்பிற்கான செயல்கள் மிகவும் எளிமையானவை. நெய்யுண்ணோம், பாலுண்ணோம் நாட்காலே நீராடி மையிட்டு எழுதோம், மலரிட்டு நாம் முடியோம் என அமைகிறது.

பாவையாடல் என்பது சங்ககாலத்தில் நிலவிய நிகழ்ச்சி. மகளிர் நீராடுங்கால் பைஞ்சாய் கோரையைக் கொண்டு பாவை செய்து, பூச்சூடி ஒப்பனை செய்து நீர்த்துறை மணலில் வைத்து நீரில் இறங்கி விளையாடுவர். மார்கழித் திங்கள் முன்பனிக் காலம் அக்காலத்தே தாயாரோடு நீர்த்துறைக்குச் சென்று பாவை நீராடி "வெம்பாதாக வியனிலவரைப்பு" எனத் தாயார் காட்டிய நெறி வழியே நின்று பரவி நீராடுவர். இதனை அம்பா ஆடல் என்றும் பின்னர் சக்தி வழிபாடாகவும் குறிக்கப்பட்டது.

நாட்டில் திங்கள் மும்மாரி பெய்யும்;
செந்நெல் வளம்
பெருகி விளையும்,
கயல் முதலிய மீன் இனம் வளம்பெறும்,
ஆனிரைகள் பாற்பயன் பெறும்,
இவ்வாறான செல்வம் நிறையும்
எனப் பண்டைய நாளை அம்பாவாடல் கருத்தைப் பரிபாடலும் கூறுகிறது.

“நேரிழை மகளிர் வார்மணல் இழைத்த வண்டற்பாவை” என்று நற்றிணையிலும் அகநானூற்றிலும் பாவை நோன்பை பற்றிய குறிப்புகளைக் காணலாம்.மார்கழித் திங்கள் முழுநிலவில் திருவாதிரையில் தொடங்கியதால், இந்த நீராடல், தை மாதத்தில் தொடர்ந்தது என்றும் அதனால் தைந்நீராடல் பொருந்தும் என்று அறிஞர்கள் கருதினர் . இப்பாவைப் பாட்டின் நலத்தில் ஈடுபட்டு இன்பம் துய்த்த பண்டைத் தமிழ்ச் சான்றோர் களும் வேந்தர்களும் தமிழ்நாட்டிலுள்ள சிவன் கோயில்கள் தோறும் மார்கழித் திங்களில் திருவாதவூர் அடிகட்கு திருவிழா எடுத்து அப்போது அவர் முன்னர் இத்திருவெம்பாவையை ஓதுதல் வேண்டுமென நிவந்தங்கள் ஏற்படுத்தினர்.

திருவெம்பாவையில் இருபது பாடல்களும், திருப்பாவையில் முப்பது பாடல்களும் கொண்டவையாகும். அனைத்தும் கொச்சகக் கலிப்பா என்ற யாப்பில் அமைக்கப்பெற்றன. இக்கலிப்பாக்களுக்குக் குறிப்பாக இராமானுசருக்கு மிகுந்த ஈடுபாடு. பெரியவாச்சான் பிள்ளையின் மூவாயிரப் படியும் அழகிய மணவாளப் பெருமான் முதலியோர் வளர்த்த பேருரைகளும் சிறப்பானவை. வெள்ளை நுண்மணல் கொண்டு சிற்றில் விசித்திர பட வீதி வாய்த்ததை எண்ணி நாங்கள் இழைத்த கோலம் அழுத்தியாகிலும் என அழகிய தமிழ்த் திருவாய் மொழியின் மொழிப்பாடுவோம். ஆண்டாள் பாடியிருக்கும் திருப்பாவை வைத்துத் காலத்தைக் கணித்திருக்கின்றனர். பதினேழாம் திருப்பாவையில் வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று என்ற அடியில் இருக்கும் வானவியல் நிகழ்வை நிபுணர்களோடு ஆராய்ந்து அது கி.பி.885, நவம்பர் 25 ஆம் தேதி எனக் கணிக்கின்றனர். சனியும் வியாழனும் நேர்க்கோட்டில் வருவதை 300 ஆண்டுகளுக்கொரு முறை வரும் நிகழ்ச்சியை வானில் நடக்கும் விந்தை யாக குறிக்கின்றனர். மணிவாசகர் காலமும் ஏறக்குறை இதே காலத்தில் தான் வாழ்ந்திருப் பார் என்பது ஆராய்ச்சியாளர்களின் இன்றும் ஆய்வுக்குரிய கருத்தாகவே உள்ளது.

தென்தமிழ் நாட்டிற்கும், கீழ்க்கடல் நாடுகட்கும் மக்கள் போக்குவரவும் அவ்வழியாகத் தமிழ்நாட்டுப் பழக்கவழக்கங்களும் பரவியிருக்கின்றன. இத்திருவெம்பாவை தமிழ் மந்திரம் என்ற பெயரால் சயாம் நாட்டிற்குச் சென்றிருக்கிறது (Java Island). அங்குள்ள அரசனுக்கு முடிசூட்டும் காலத்தில், லோ-ஜின்-ஜா என்ற திருவிழாக் காலத்தும், திருவெம்பாவையைப் பாடலோர் எம்பாவாய் என முடிவதால் லோரிபாவாய் என்று பெயரிட்டும் திருக்கயிலாய வழிபாட்டுப் பாடலாகவே வணங்குவதாகக் கூறியுள்ளார்.

நீராடுவதைப் பொய்கையில் நீராடுவதென்று மணிவாசகரும், கோதையாரும் திருமால் அருளில் படிவதாக இருவகையாகக் கருதினர். ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் இம்மார்கழி மாதம் அனைவரும் படித்து உருகுவது இன்றைய இக்கட்டான காலத்தில் உறுதுணையாக அமையும் என விழையலாம்.

பண்டித நேருவும் பண்டைத்தமிழும்

சங்கத்தமிழ் 3,03,373

6

மூதறிஞர் நீ.கந்தசாமிப் பிள்ளை

ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு சட்டை அணிவேனானால் சட்டைகளின் எண்ணிக்கை அதிகமாகி ஒவ்வொன்றுக்கும் உள்ள பயில்வெண்கள் குறையுமல்லவா என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே," போதுமானது கணக்கு முறையில் காணும் உண்மைகள் போற்றத்தக்கன நானும் ஒருவாறு புரிந்து கொண்டேன். இவையெல்லாம் மொழியியல் பற்றியன. தமிழைப்பற்றிச் சுருக்கமாக என்ன சொல்லக்கூடும் என்றார். நான் "இது ஒரு தொன்மையான மொழி. தொடர்ச்சியாக உலகத்தில் நின்று மக்கள் வளத்துக்கேற்ப வளரும் வன்மையுடைய மொழி. எந்தக் காலத்தில் எந்த நாட்டில் எந்தப் பெரியவர்கள் கூறியுள்ள அரிய கருத்துக்களையெல்லாம் இனிமையான சொற்களிலே தன்னகத்தே கொண்டுள்ள மொழி. இவ்வாறு நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே என் சொற்கள் விளக்கமில்லாமையாலோ, அவர் சரியாக ஏற்றுக் கொள்ளாமையினாலோ 'உங்கள் மொழியில் காணப்பெறும் கருத்துக்களை வெளியிட்டு உள்ளவர்கள் தான் உயர்ந்தவர்கள் என்று எண்ணுகிறீர்களா ?' என்றார்:

நான் விரைவாக 'அது அல்ல, உயர்ந்தவர்கள் கருத்துக்களெல்லாம் என் மொழியில் காணப்படும் என்பது தான்' என்றேன். வேண்டுமானால் உயர்ந்தவர்களுடைய எந்தக் கருத்தைக் கூறினாலும் அதற்கு ஒத்த கருத்து தமிழ் மொழியிலிருந்து நான் கூற முடியும். அதிகம் போக வேண்டியதில்லை. என் முன்னிற்கும் எங்கள் பிரதமருடைய கருத்துக்களுக்கும் சொற்களுக்கும் எதிரொலி போன்ற சொற்களையும் நான் தமிழிலிருந்து எடுத்துக் கூறுவேன் என்றேன்.

அவர் ஒன்றும் சொல்லாது, “என்னைப் பற்றிப் பேசுகின்றீர்களா? ஏதாவது சொல்லுங்கள் பார்ப்போம் என்று கேட்பார் போல மார்பை விரலால் தட்டிக் காண்பித்து கையைக் குறிப்பாக ஆட்டினார். நான் உடனே காலம் விரைந்து செல்வதை உணர்ந்து 'விரைவாக இப்போது எனக்கு உடனடியாக நினைவில் வருவது தாங்கள் மனமுடைந்து காந்தியடிகள் இறந்தவுடன் சொல்லிய சொற்களுக்குச் சரியான எதிரொலி போன்று கம்பர், தசரதன் இறந்ததைக் கேட்ட இராமன் புலம்பியதாகக் கூறும்,



“நந்தா விளக்கு அனைய நாயகனே!
நானிலத்தோர் தந்தாய்! தனி அறத்தின்
தாயே! தயா நிலையே! எந்தாய்! இகல் வேந்தர்
ஏறே! இறந்தனையே அந்தோ ! இனி,
வாய்மைக்கு ஆர் உளரேமற்று?'

என்ற செய்யுளை எடுத்து அவர் சொற்களோடு ஒத்திட்டுக் காண்பித்தேன்.

வளரும்...

56

ஆத்திசூடி | ATTISUDI | آثي سودي| 阿媞邱立 |
| ആത്തി ചൂടി | आत्तिचूड़ी | ఆత్తిచూడి | ଆଭୂଡି

திருமாலுக்கு அடிமை செய்
Serve the Almighty (MALAN)
لا تكسل
保持自信
ദൈവത്തിനു സേവ ചെയ്യുക
भगवान विष्णु के दास बनो।
దేవునికి సేవ చేయుము

குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்:
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்

முனைவர் ந.அருள்
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை

மொழியியல் கட்டமைப்பு

மொழியியல் (Linguistics): மொழியின் தன்மை மற்றும் அமைப்பைப் பற்றிய ஆய்வாகும். மொழி ஆய்வுக்கு ஒருமுக அணுகுமுறையையோ (ஒரு குறிப்பிட்ட சமயத்தில், மொழி எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறு விளக்குவது) (ஒரு மொழியின் வளர்ச்சியை அதன் வரலாற்றின் வழி ஆராய்வது) மொழியியலாளர்கள் பயன்படுத்துகிறார்கள்.

மேற்கத்திய உலகில், மனித மொழியின் தோற்றங்கள் பற்றி கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் கலந்து உரையாடிய கிரேக்க தத்துவ மேதைகள்தான் மொழியியல் கொள்கை பற்றி முதன்முதலில் ஆராய்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். கி.மு. முதலாம் நூற்றாண்டில் தயோனிசஸ் திராக்ஸ், முதலாவதாக முழுமையான கிரேக்க இலக்கணத்தை எழுதினார்.



இதுவே உரோமானிய இலக்கண ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது. அவர்களது படைப்புக்கள் இடைக்கால மற்றும் மறுமலர்ச்சிக்கால வட்டார இலக்கணங்கள் உருவாகக் காரணமாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வரலாற்று (மொழியியல் தோன்றியதன் விளைவாக, மொழியியல் அறிவியல் துறை அமைந்தது. பத்தொன்பதாம் மற்றும் ஆரம்ப இருபதாம் நூற்றாண்டுகளில் பெர்டினாண்ட் டி சசூர் மொழியியலின் கட்டமைப்புப் பிரிவினை நிறுவினார். மொழியின் உள்ளார்ந்த அமைப்பினைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இயல்பான பேச்சு வழக்கினை ஆராய்கிறது. 1950 ஆம் ஆண்டுகளில் பேரறிஞர் நோம் சோம்ஸ்கி கட்டமைப்பு அணுகுமுறையினை எதிர்த்து தம் கோட்பாட்டை நிறுவினார். (பேசுபவர்களின் சொந்த மொழி பற்றிய அவருடைய ஆழ்மன அறிவினைத் (திறன்) பற்றி ஆராய வேண்டுமே யொழிய, அவர்களது மொழியின் நடைமுறை வெளிப்பாடு (அல்லது செயற்பாடு) பற்றி ஆராயத் தேவையில்லை என்று பேராசிரியர் சோம்ஸ்கி கருதினார். அவர் படைப் பிலக்கணத்தைப் புதுமையாக உருவாக்கினார்.

புத்தாண்டுக் கொண்டாட்டம் !

முனைவர் சோமலெ சோமசுந்தரம்

அமெரிக்கா

மக்கள் நெருக்கடியே இல்லாத அமெரிக்காவில் பத்து இலட்சம் மக்கள் ஒருவரை ஒருவர் நெருக்கிக்கொண்டு நிற்கும் அரிய காட்சி அது. உலகெங்கும் ஒரு முறையாவது தொலைக்காட்சியிலோ, செய்தித்தாளிலோ, ஊடகத்திலோ பார்க்கப்படும் காட்சி!

அமெரிக்காவில் புத்தாண்டு என்றாலே மனக்கண் முன் வருவது நியூ யார்க் நகரின் டைம்சு ஸ்கொயர் (Times Square) பந்து!

இரண்டாம் உலகப்போர் காலத்தில் இரண்டு வருடங்களைத் தவிர, 1907-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து புத்தாண்டின் முதல் நொடியில் கொடிக் கம்பத்தின் கீழே அந்த மின் பந்து வந்து சேர்வதைப் பார்த்து மகிழ்ச்சி வெள்ளத்தில் புதிய வருடத்தை வரவேற்போர் கோடிக்கணக்கானோர்.

நியூயார்க் நகரில் வான வேடிக்கைகள் தடை செய்யப்பட்டதால் புது வருடத்தை வித்தியாசமாகக் கொண்டாட அறிமுகப்படுத்தப்பட்ட து இந்த “பந்து இறக்கம்" (“ball drop”). தொடக்க காலத்தில் 317 கிலோ எடையில், நூறு (25 வாட்சு) மின் விளக்குகளுடன் மரத்தாலும், இரும்பாலும் செய்யப்பட்டு, தற்போது 5,386 கிலோ கனம் உள்ள 2,668 படிகங்களுடன் (crystals), கணினி வாயிலாக இயங்கும் LED வண்ண விளக்குகளின் ஒளியுடன் காலத்திற்கேற்ப புதுப்பொலிவு பெற்றுள்ளது அந்தப் பந்து. ஆண்டுக்கு ஒரு முறை இறங்கும் அந்தப் பந்து "நியூயார்க் டைம்சு" செய்தித்தாள் தலைமை அலுவக கட்டிடத்தின் உச்சியில் நாள்தோறும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது.

டைம்சு ஸ்கொயர் திருவிழா பெருமளவில் கேளிக்கையாக அமைய, அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் அவற்றின் மரபுகளையும் பண்பாடுகளையும் பெருமையோடு வெளிப்படுத்தும் வகையில் வித்தியாசமான புத்தாண்டு விழாக்கள் நடை பெறுகின்றன. அமெரிக்க நாட்டுப்புற இசையின் தலைநகரான நாஷ்வில் நகரில் 10 அடி உயரமுள்ள கிட்டார் (guitar) இசைக்கருவியை நூறு அடியிலிருந்து இறக்கி, இசை வெள்ளத்தில் மூழ்கி புத்தாண்டை வரவேற்கின்றனர்.

உருளைக்கிழங்கு விளைச்சலில் முன்னணி மாநிலமான ஐடஹோவின் தலைநகர் பாய்சி நகரில் புது வருடத்தன்று விழுவது வேறு எதுவாக இருக்க முடியும்? உருளைக் கிழங்கு வடிவத்தில் 180 கிலோ எடையில் செய்யப்பட்ட பொம்மையை கீழே விழச் செய்து, பார்ப்போரின் உள்ளத்தில் மகிழ்ச்சி உணர்வுகளை உருள வைக்கிறார்கள்!

"Peach" பழ மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்ற ஜார்ஜியா மாநிலத்தின் அட்லாண்டா பெருநகரில் 360 கிலோ "Peach Drop" இறக்கப்பட்டு புத்தாண்டிற்கு ஒரு புதிய ருசியைக் கொடுக்கிறது! காளான் பண்ணைகள் மிகுந்த பென்சில்வேனியா மாநிலத்தின் கென்னெட் ஸ்கொயர்

நகரில் 100 அடி உயரத்திலி ருந்து மின்னுகின்ற காளானின் வடிவம் இறக்கப்பட்டு, காளான் களின் விரைவான வளர்ச்சியைப் போல புது வருடத்தன்று மகிழ்ச்சி பெருகு கிறது.

நண்டுகளுக்குப் பெயர் பெற்ற மேரிலாண்ட் மாநிலத்தின் கடலோர ஈஸ்டன் நகரில், மனிதர்களின் காலடி ஓசை கேட்டு கடற்கரை மண்ணில் விரைந்து மறையும் நண்டோ, புதுவருட நள்ளிரவில் கம்பீரமாக கொடிக் கம்பத்திலிருந்து இறங்குகிறது.

புது வருடத்தன்று கருப்புப் பட்டாணி (black eyed peas), முட்டைக்கோசு, பன்றிக்கறி ஆகியவற்றை உட்கொள்வது வருடம் முழுதும் நன்மைகளைத் தரும் என்றும், கோழி, வான் கோழி, மாட்டுக்கறிகளை உண்பது அந்த வருடத்தில் தீமைகளை விளைவிக்கும் என்ற அமெரிக்க மரபுகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் பல காரணங்கள் உள்ளன. கோழி, வான்கோழி போன்றவை தம் உணவிற்காக பின்னோக்கித் தோண்டுபவை; மாடு இருந்த இடத்தில் இருந்தே சாப்பிடுவது; பன்றியோ தன் மூக் குடன் முன்னோக்கிச் செல்வது. புது வருடத் தில், பின் நோக்காமலும், இருந்த இடத்திலேயே இருந்துவிடாமலும், நாம் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பதையே அந்த உணவு விருப்பங்கள் வெளிப்படுத்துகின்றன.

மூட நம்பிக்கைகளை விளக்க பல காரணங் கள் சொல்லப்படுவது வழக்கம். புது வருடத் தன்று கருப்புப் பட்டாணி சாப்பிடுவது அந்த வழக்கத்திற்கு விதி விலக்கல்ல. 1860-களில் நடைபெற்ற அமெரிக்க உள்நாட்டுப் போரில் அமெரிக்காவின் வட பகுதியில் இருந்து தெற்கே வந்த "யூனியன்" படையினர் தம் எதிரிகளான "Confederates" படையினரின் உணவுப் பொருட்களையெல்லாம் கொள்ளைய டித்தபோது, கறுப்புப் பட்டாணியை மட்டும் கால்நடைகளின் உணவெனக் கருதி விட்டுச் சென்றனர். உணவுப்பொருள்கள் இல்லாமல் தவித்த தெற்கு மாநில அமெரிக்கர்களுக்கு கறுப்புப் பட்டாணி அதிர்ஷ்ட உணவாக வயிற்றுப் பசியைப் போக்கியதாம்.

குளிர் காலம் தொடங்கும் போது அறுவடை செய்யப்பட்டு, கடுங்குளிரிலும் எளிதாக சேமித்து வைத்துக் கொள்ள முடிந்ததாலும், குறைந்த விலையில் வருடம் முழுதும் கிடைத்த தாலும்,சமைத்த பிறகு அதன் அளவு கூடுவதால் அதனை சாப்பிடுவதன் மூலம் செல்வவளம் பெருகும் என்ற நம்பிக்கையாலும் அமெரிக் காவின் தெற்குப் பகுதிகளில் கருப்புப் பட்டாணி அதிர்ஷ்ட உணவாகக் கருதப்பட்டது.

புது வருடத்தில் புதிய உறுதி மொழிகளுக்கு பஞ்சமே இல்லை. 70 சத விகித அமெரிக்கர்கள் குறைந்தது ஒரு உறுதிமொழியாவது ஆண்டு தோறும் புது வருடத்தன்று எடுத்துக்கொள் கின்றனர். உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்பதே மிகப் பெரும்பாலோர் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி. வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் உடற் பயிற்சிக் கூடங்கள் தேன்கூடு போல சுறுசுறுப்பாகக் காட்சியளிக்கும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிக்கேற்ப, பழக்கங்களை உதறித்தள்ள முடியாமல், மார்ச்சு மாத தொடக் கத்தில் உறுதிமொழிப் பாதையில் தொடர்ந்து பயணம் செய்வோர் பத்து சத விகிதத்திற்கும் குறைவே! பத்து மாதங்களுக்குப் பிறகு மீண்டும் தொடர்கிறது அவர்களின் பயணம். **பயணங்கள் முடிவதில்லை!**

மறைமலை அடிகளார் மாட்சி !

7

அறிஞர் ந.ரா.முருகவேள்

திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை, சோமசுந்தரக் காஞ்சி, சாகுந்தல நாடகம் என்பனவற்றால் அடிகளின் செய்யுளி யற்றும் திறம் விளங்கும். பண்டை உரையா சிரியர்களைப் போல அடிகளார் உரை வரையும் பெற்றிமை ஆசிரியர் நச்சினார்க் கினியர் கொண்டு சுட்டிக் குழறு படை செய்தனவற்றை மறுத்து வரைந்த பட்டினப் பாலை, முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை களானும், திருவாசக வா வுரையானும், சாகுந்தல நாடகம் திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை என்பனவற்றிற்குச் சேர்த்துள்ள உரைக் குறிப்புக்களானும் இனிது வெளிப்படும். இவையன்றியும் அடிகள் இயற்றிய கோகிலாம்பாள் கடிதங் கள், குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி என்பன, தமிழிற் புதுவது. (Novel) புனையுந்திறம் இதுவென அத்துறை வல்லார்க்கெல்லாம் அறிவித் துணர்த்தும் இருபெரு விளக்கங்களாகும்.

சிறுவர்க்கான செந்தமிழ் அடிகளின் பாட நூல் எழுதும் ஆற்றலுக்கு அரியதொரு எடுத்துக்காட்டு. இங்ஙனமே மறுப்புரை வரைதல் ஆராய்ச்சி செய்தல் என்பனவற் றிலும் அடிகள் தனித்தனியே பெருந்திறம் பெற்றவர் என்பது வெளிப்படை.

இம்மட்டோ / இலக்கியம் (Literature) கணக்கு (Mathematics) வரலாறு (History) நில நூல் (Geography) அறிவியற் கூறுகள் (Physics, Chemistry, Physiology, Botany etc.,) கல்வெட்டு (Inscriptions) மெய்ப் பொருள் நூல் (Philosophy) மருத்துவம் யோகம் என்னும் இன்னோரன்ன பலகலை களிலும் அடிகள் வல்லவராவர். சங்கர நமச்சிவாயப் புலவர் பவணந்தியாரைக் குறிப் பிடுதல் போலப் பல்கலைக் குரிசில் (All round genius) எனவே அடிகளைக் குறிப் பிடுதல் பொருந்தும். கரிகாலனைத் 'தாய் வயிற்றிருந்தே தாயம் எய்தி'னன் என முடத்தாமக் கண்ணியார் மொழிதல் போல, அடிகளும் கருவிலேயே திருவுடையராய்த் தோன்றினர் போலும்!

வளரும்...

தேன் துளி!

தேன்துளி –1

மெய்யெழுத்துகளில் ஒன்றான ழகரம் தரும் ஒலி தமிழிலும் மலையாளத்திலும், மாண்டரீன் (சீனம்) உட்பட்ட சில மங்கோலிய மொழிகளில் மட்டும் காணப்படுகிறது.

உலகில் *6800* க்கும் அதிகமான மொழிகள் *200* நாடுகளில் பேசப்படுகின்றன. *2261* மொழிகள் மட்டுமே எழுத்துருவும் பேச்சொலியும் கொண்ட மொழிகளாக இருக்கின்றன. பிலிப்பின், இந்தோனேசியன், மலாய் போன்ற மொழியினர் தமது மொழியை ஆங்கில எழுத்துருக்கள் கொண்டே எழுதும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர்.

தேன்துளி - 2

இலியனர்டோ டாவின்சி, ஒலியியல், நீரூர்தியியல் தொடங்கி வானிலை அறிவியல், உடற்கூறியல் உள்ளிட்ட பல்வேறு அறிவுசார் புலங்களில் கரைகண்ட மாபெரும் சிந்தனையாளர்; பொறியியலில் நீரழுத்தவியல் நிபுணர்; கதைகூறும் வல்லுநர்; பரிசோதனைகளை நிகழ்த்துவதில் அளவிலா ஆனந்தம் கொண்டவர்; தான் வாழ்ந்த காலத்தைவிட ஐந்து நூற்றாண்டுகள் தாண்டிய தொலைநோக்கு அறிவாற்றல் மிக்கவர் ஆவார்.

பிரான்சு நாட்டில் தமிழ் மொழியின் வளர்ச்சி!

பேராசிரியர் சச்சிதானந்தம்
பிரெஞ்சு மொழியியல் நிறுவனம், பாரீசு

18

அகராதிகள் : இருமொழி, மும்மொழி

பிரெஞ்சு - தமிழ் - ஆங்கிலம்

26. பிரெஞ்சு நாடகக் கலையின் மோலியர்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 1998

பதிப்பகம் : கலையமுதம்

27. Victor Hugo எழுத்து வாழ்க்கை

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 1999

பதிப்பகம் : ஆவணம்

28. பொன் தெய்ன் புனைக்கதைகள்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2000

பதிப்பகம் : மௌனம்

29. சுவையான சில பிரெஞ்சுக் கவிதைகள்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2001

பதிப்பகம் : Gnana

30. பிரெஞ்சு மொழி ஓர் ஆழ்ந்த அறிமுகம்

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2002

பதிப்பகம் : கட்டுரை

31. Le Tamoul sans peine

ஆசிரியர் : எலிசெபெத் சேதுபதி

ஆண்டு : 2002

பதிப்பகம் : ASSIMIL

32. தமிழ் வழி ஆங்கிலம் பிரெஞ்சு ஓர் ஒப்பீட்டுக் கற்கை

ஆசிரியர் : ச.சச்சிதானந்தம்

ஆண்டு : 2004

பதிப்பகம் : Gnana

வளரும்...

திருவருட்பா முதலைந்து திருமுறைகள் !

உரைவேந்தர் ஔவை துரைசாமி

25

தென்டனிட்டேன் என்று சொல்லடி

வானத் ன் மீது மயிலாடக் கண்டேன்

என்பன போலும் பாடல்கள் செல்வாக்கும் பெற்று நாடு முழுதும் பாடப்பெற்றன. இவர் படைத்த கண்ணிகள் எவரையும் ஈர்க்க வல்லவை எளிமையும், இனிமையும் வாய்ந் தவை. கூட்டு வழிபாட்டுக்குரிய பாட்டிசை யாகப் பயின்றவை.

இத்தகைய அருள்மணப்பாக்களை நாம் எங்ஙனம் பயில்வது என்பதற்கும் பெருமான் நால்வர் பாடல்களில் ஒன்றிக்களித்த அனுப உணர்வுகள் துணைசெய்கின்றன.

தேன்படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன்
நாஎன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவம் காண்
தனிக்கருணைப் பெருந்தகை

என ஆளுடைய நம்பிகள் அருள்மாலையிலும்

'வான்கலந்த மாணிக்க வாசகரின்
வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்
சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்
தீஞ்சுவைக்கலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே!

என ஆளுடைய அடிகள் அருள் மாலையிலும் கூறுகின்ற அனுபவ மொழிகள் நமக்குக் கற்கும் முறை காட்டும் கனிவு மிக வாட்டும்.

இனி நான் கலந்து பாடுதல் என்பதற்கு மணிவாசகப் பெருமான் உரைத்த வாசகத் தைத் தன்னுடைய பாக்களிலே கலந்து பாடுதல் என்றும் கூறுவர்.

ஈறிலாப் பதம் எலாம் தருதிருப்பதம்
அழிவினால் இன்புதவுகின்ற பதமே

என்ற தொடரிலே 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே' என்ற மாணிக்கத்தமிழின் சாயலைக் காணுகின் றோம்.

ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்கு உறு
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே

என்பது மணிவாசகம்.

வளரும்...

பாரதியின் கவிதைக் கலை சில கருத்துகள்... !

டாக்டர் அலெக்சாந்த எம். துப்யான்ஸ்கி

4

வெறியாட்டின்போது வெறியாடும் வேலன் ஆடுகளத்துக்குள்ளேயே முருக னைக் கொண்டு வந்து, அதாவது முருகனை "ஆற்றுப்படுத்தி," தெய்வத்தோடு அங்கு கூடியிருப்போருக்கும் ஒவ்வொருவருக்கும் இடையே ஒரு பரவசமான ஐக்கிய பாவத்தை உருவாக்குகிறான். மேலும், முருகன் வெறி யாடும் வேலனுக்குள் புகுந்து கொண்டு, அவனது வாய் மூலமாக மனித உறவுகளை யும் பிற விஷயங்களையும் பற்றிய உண்மை களைச் சபையோருக்கு எடுத்துக் கூறுவான் என்றும் நம்பப் படுகிறது. எனவேதான் பாரதி தான் மகாகவி.

விரதம், சபதம், பக்தி ஆகியவற்றை போற்றியும் விசுவாச காதகம் புரிபவர்களைத் தண்டித்தும் வருகின்ற தெய்வமே முருகன் என்பதையும் இங்கும் குறிப்பிடுவது பொருத்தமாகும். சங்க இலக்கியமான குறுந் தொகையில், களத்துக்கு அருகேயுள்ள மரத்தில் வசித்து வரும் பண்டைத் தெய்வம் விரதங்களை முறிப்பவர்களைக் கொன்று விடுவதாகக் கூறுகின்றனர் எனப் பொருள் படும் வரிகள் உள்ளன (குறுந்தொகை 87, 1 - 2)

எனவே நமது ஆய்வுரையை முடிக்குமுன், முருக வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட வெறியாடலை வருணிப்பதன் மூலம் பாரதி, (பாரதி முருகனைப் பற்றி நேரடியாகக் கூற வில்லையாயினும்கூட), வெற்றி, வலிமை, ஒற்றுமை, பக்தி முதலியவை பற்றிய கருத்துகளால் தம் கவிதையை நிறைத்து விடுகிறார். இந்தக் கருத்துகள் பாடலில் வாசக பூர்வமாக இடம் பெறவில்லை என்பது உண்மைதான்.

எனினும், இவை அதில் குடிகொண்டே உள்ளன. பாரதி பயன்படுத்தியுள்ள படிமத்தின் மூலம் இந்தக் கருத்துகள் உள்ளத்தில் தூண்டப்படவே செய்கின்றன. இதனால் இந்தக் கவிதை வரிகள் அர்த்தபுஷ்டியும் உணர்ச்சியும் மிக்கனவாக மாறி விடுகின்றன. தேச விடுதலைப் போராட்டக் காலத்தில் இந்தக் கருத்துகளே விடுதலைப் போராட்ட வீரர்களின் லட்சியங்களாக விளங்கின; வெற்றி மார்க்கத்தில் மக்களை இட்டுச் சென்ற கோஷங் களைப் போலவே விளங் கின என்பதும் சொல்லா மலே விளங்கும்.

பாரதி : (தமது பல பாடல்களில் பயன் படுத்தியுள்ளதைப் போலவே) இந்தப் பாடலிலும் தாம் பயன்படுத்தியுள்ள கவிதா வடிவமானது தமிழ் மக்களுக்கு மிகவும் அருமை வாய்ந்தது என்பதை, இது அவர்களது இதயங்களைப் பெரிதும் நெகிழ வைக்கும் என்பதை அவர்கள் உள்ளத்தில் தேசபக்த உணர்வை எழுப்பும் என்பதை அறிந்தே இருந்தார். எனவே, பாரதியின் கவிதைப் படைப்புகளைப் படிக்கும் போதும், அல்லது ஆராயும்போதும், பாரதி தொன்னெடுங்கால கலாசாரத்தையே எப்போதும் சார்ந்திருந்தார் என்பதையும் அதன் மூலம், இந்தியாவின், குறிப்பாக, தமிழ்நாட்டின் வளமிக்க கடந்த காலக் கலாசாரமும், வளம் மிக்கதாகவும் ஒளிமிக்கதாகவும் விளங்கக்கூடிய வருங்காலக் கலாசாரமும் சந்திக்கும் சந்தி நிலையில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்தார் என்பதையும் நாம் நினைவில் நிறுத்தியாக வேண்டும்.

அறிஞர் ந.ரா.முருகவேள்

ஆசிரியர் நக்கீரர்

இங்ஙனமே, தெய்வநலங் கமழும் இவ்விழாவின் சிறப்பினைத் தெய்வவுணர்விற் சிறந்து திருமுருகாற்றுப்படை பாடியருளிய ஆசிரியர் நக்கீரர். தமது பாடல் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். அந்திமாலைச் செக்கர் வானத்தில் வெண்ணிறக் கொக்கினங்கள் வரிசையாகப் பறந்து செல்லும் காட்சி, முருகப்பெருமான் தமது சிவந்த மார்பில் அணிந்துள்ள முத்துமாலையைப் போல விளங்குகின்றது என்னும் கருத்து அமைய,

" நெடுவேள் மார்பின் கரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் திரைபறை யுகப்ப "

- அகநானூறு 120

என அருளிச் செய்யும் இயல்பினராகிய ஆசிரியர் நக்கீரர், தம் தெய்வ உணர்வின் மாட்சிமை தோன்ற,

" மழைகால் நீங்கிய மாக விசம்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் தடுதாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம ! "

- அகநானூறு, 141.

என்னும் வரிகளில், இவ் விளக்கீட்டு விழாவின் இயல்பினை இனிது பாடி இன்புறுத்துகின்றார். விளக்கீட்டு விழா, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் பௌர்ணமியை ஒட்டி நிகழும் என்பதனை, “மதி நிறைந்து அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்" என்னும் தொடரால், ஆசிரியர் நக்கீரர் புலப்படுத்தியிருத்தல் அறத்தின்புறர் பாலது.

வளரும்...

தமிழக அரசின் விருதுப் பட்டியல் !

தமிழ்ச் செம்மல் விருது

தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் ஆர்வலர்களுக்கு அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பெருமைப்படுத்தி, ஊக்கப்படுத்தும் வகையில் வழங்குதல். (விருதுத் தொகை ரூ. 25,000/- மற்றும் தகுதியுரை வழங்கப்படும். மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 32 பேருக்கு வழங்கப்படும்).

XXV

தேனி மாவட்டம்

வ.எண்.	ஆண்டு	விருதாளர்
1	2015	தமிழாசிரியர் ப.பாண்டியராசன்
2	2016	திரு.து.சுப்பராயுலு
3	2017	புலவர் மு.இராசரத்தினம்
4	2018	திரு.சு.குப்புசாமி
5	2019	திரு.சா.பி.நாகராசன் (எ) தேனி இராஜதாசன்

இப்பல்கலைக்கழகம் எல்லா மக்கட்கும் உரிய பொதுவுடைமை என்று சொல்லவும் வேண்டுமோ? எண்ணிறந்தோர்க்குப் படிக்க வாய்ப்பளித்தும் பட்டங்கள் வழங்கியும் வெளிநாடுகள் செல்ல வாயில் வகுத்தும் நெறிப்படுத்துவது தான் இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பென்று எண்ணுவது குறுகிய நோக்காகும்.

பரந்த ஞாலப் போக்குக்கொப்ப நம் நாட்டுப் பொது மக்களின் அறிவுத் தரத் தையும் பொருளாதார நலத்தையும் பண் பாட்டுப் பாங்குகளையும் வானுற உயர்த்தி வளமாக்குவது இந்திய நாட்டுப் பல்கலைக் கழகங்களின் தலையாய பொறுப்பும் நிலையான குறிக்கோளும் ஆம் என்று எண்ணுகின்றேன்.

கடல், மலை, காற்று முதலான இயற்கை களின் பயன்களை மக்கள் நுகர்வது, உணர்வது போலப் பல விழுதுடைய ஆலமரம் போன்ற பல்கலைக்கழகத்தின் பயனை நான்கு மாவட்ட மக்களும் நுகரவும் உணரவும் செய்ய வேண்டுமல்லவா? இதற்குரிய திட்டங்களையும் பரப்புமுறை களையும் நடைமுறைப்படுத்தக் கல்லூரிகள் செவ்வனே ஒத்துழைக்க வேண்டும் என்பது என் விழைவு.

3. தமிழ்மொழியும், பல்கலைக்கழகமும்

பல்கலைக் கழகத்தின் பயனையும் அறிவையும் பொதுமக்கள் உணர வேண்டு மானால், மக்கள் மொழியாகிய தமிழே சிறந்த வாயில் என்பது வெளிப்படை. தமிழ் மாநிலத்துத் தோன்றிய பல்கலைக் கழகம் பல கலைகளையும் தமிழ் வாயிலாகக் கற்பிக்க வேண்டும், பரப்ப வேண்டும், ஆராய வேண்டும். - அப்போது தான் தேசியக்கவி பாரதியாரின் விருப்பப்படி, எல்லாத் துறையையும் சொல்லும் ஆற்றல் தமிழுக்கும் ஏற்படும். தமிழர்க்கும் ஏற்படும். தமிழை ஆங்கிலம்போல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை முதலான எல்லாத் துறைக்கும் உரிய கல்விமொழி யாக்குதல் எல்லாத் துறையாசிரியர்க்கும் உரிய கடமையாகும் என்று நினைவூட்டு கின்றேன்.

உயர்நிலைப் பள்ளி வரை பயிற்று மொழி ஒன்றும், கல்லூரி பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழி வேறொன்றுமாக நம் நாட்டில் இருந்து வரும் மொழித்தாவல் உலகக் கல்வி அறத்துக்கு முரணாகும்;

வளரும்...

சிலப்பதிகாரம் - ஆங்கிலம் !

பேராசிரியர் சி.அ.சங்கரநாராயணன்
தலைசிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர், தமிழக அரசு

25

Canto - 7

Kanal Vari
Lido - Libretto - 1, 2, 3

Dashed ashore the chanks aslant boom and bounce upon
the dune houses little girls built and flatten them fur-rowed
in slopes! Therefore to scare the chanks away,
the maidens tear their garlands and pace them over;
the blue bulbs from them scatter in eve,show in a row
inviting! The males that pass by wonder if they are eyes
beckoning and pause to behold almost held up!
Isn't our Pukaar too a polis of mistaken identity!
Confidante Speaks: Love in languishment

….. 6

As right whorled chanks dive and plough the shore
the scars of dunes do appear. Fair inophyllum laurels
shower heavy flowers whose pollen coat obscure
the dents already therein!
In such shoreside grove,
her full moon like face and lustrous eyes have hurt
and pinked all. No medicine to heal the mortal wounds
but her own tender tinea itchy
breasts shall soothe and cure
the pokes her sharp eyes have marked in fun!
"I don't know this ahead!"
In tumescent accent!

….. 7

Near a spread of lymph rich fish strewn open
in sunlight to dry, sits in guard a virgin to chase
the sea-fowls that try to beak, filch and burgle
the pieces! Holds she a bunch of amber carymbose
racemes of flowers for bees to hover and buzz.
I know not for sure, such a Deity stays put
on seashore arbor.Had I known of her,
presence ahead, wouldn't have dared there!

….. 8

With fishnets hauling the fish wealth of sea, live the folk;
in their littoral dwellings in open yards, holding up a stalk
of floral bunch guards a lovely lowland lass warding off
the fishy birds that swoop in stealth for a catch of catch!
As if a fell Yama capable of assuming a form of his choice is her pair of eyes sharp spear like to kill that keen her on the wavering wavy main's marge cool with arbor!
I know not that afore! Had I known I won't have dared there!
Moon! Murder! Maiden!
Antistrophe

….. 9

To Continue...

முனைவர் தேவி நாச்சியப்பன்

உதவும் பண்பைச் சொன்ன குழந்தைப் பாடல்கள், நன்றி பற்றியும் நயமாய்ச் சொல்கின்றன. திருவள்ளுவப் பெருந்தகை செய்ந்நன்றியறிதலுக்குத் தனி அதிகாரம் அமைத்துள்ளார். குழந்தைக் கவிஞர்களும் நன்றி மறவாமையைக் குழந்தைகள் மனதில் பாடல் வழியாகப் பதியச் செய்கின்றனர்.

" ஒருவர் செய்த உதவியினை
உலகோர் அறியச் செய்தலொடு
பெருமை கிட்டும் வண்ணமாய்
பேசி நன்றி காட்டென்பார்!
நன்றி மறத்தல் தீதென்று
நாளும் உரைத்து நின்றிருந்தார் !
என்பும் பிறர்க்கு ஈந்திடவே
எங்கள் அப்பா சொல்லிடுவார் ! "

என்று பாடுகிறார், கவிஞர் மு.கோவிந்தராசன்.

" நன்றி மறந்தவர் வாழ்ந்ததில்லை
நன்றி காத்தவர் தாழ்ந்ததில்லை
நன்றி உணர்வைப் பெற்றாலே
நமக்கு வீழ்ச்சி வருவதில்லை. "

நன்றி மறவாமை, நன்றி மறத்தலினால் ஏற்படும் விளைவுகளைக் குழந்தைக்குப் புரியும் எளிய சொற்களால் சொல்லும் பாடலின் ஆசிரியர் கவிஞர் திருச்சி பாரதன்.

குழந்தைகளிடத்தில் வஞ்சமில்லாத சண்டைகள் அவ்வப்போது வந்து மறையும். அதனை முளையிலேயே பாடல் வழி அகற்றக் கவிஞர்கள் முயன்று பாடிய பாடல்களைப் பார்ப்போம்.

வளரும்...

Everlasting Tradition!

கலைத்திலகம் திருமதி சீதை சிதம்பரம்

24

8. Sarrow in a Trail

Even rivers which are in spate during times of flood turn completely dry at times.

Lakes which are parched in summer become full during the rainy season.

Fields turn fertile only after being scorched.

Leaves wither from trees and sprout again.

In God's nature, the only permanent feature is the mountain.

"Even that grows and sinks", say the scientists.

God places and man on the same pedestal.

There is not a single man totally blessed with joy nor is a man totally lost in sorrow.

If the first half is income, the next is expense.

If the first is happiness, the next is sadness.

In God's balance, both the scales rise and fall.

"Laugh thou when troubles come;

There's none other to confront and drive away thy sorrow' Says Valluvar—Kural 621

None has ever been endowed with all aspects of prosperity by God.

I suffered pangs of hunger at one time and food was not within my reach.

Later hand hunger and food was also available.

Now food there is in plenty; but in me there is no sign of hunger!

A certain person became a ruler of thousand hectares of land by amassing piles and piles of money.

The very next day, the doctor advised him not to eat too much cereal for the had diabetes.

In China, when the Revolution took place, Mow-Tse-Tung was able to ascend and descend many a mountain. He for years had even the strength to carry his wife on his shoulders and walk.

To Continue...

திருவெம்பாவை

செவ்விசை மாமணி திருமதி சீதை மெய்கண்டான்

35

மாணிக்கவாசகர், கோவை பாடிய வாயால் மார்கழி மாத திருவெம்பாவையைப் பாடினார்; இறைவனை வணங்க இளங்காலையில் துயிலெழுந்து நீராடி இல்லத்தின் முகப்பில் கோலம் போட்டு, மலர் பரப்பி வழிபடும் வகையில் பாடிய திருவண்ணாமலை பதிகத் தொகுதியிலிருந்து திருவெம்பாவையில் இள மகளிர் விடிவதற்கு முன்னர் எழுந்து, தோழியர் ஒன்று சேர்ந்து தெருவில் நடந்தபடி ஒருவரையொருவர் நீராட அழைப்பது போன்று தொடங்கி இருப்பார். இறைவனின் அருளை எடுத்துக்கூறி, இன்னமும் உறங்கும்

பெண்ணே விழித்து எழுந்து வா. மார்கழி நீராட்டு இறைவழியைக் காட்டும் என இனிமையாக அழைப்பது போன்ற பாடல் களைத் திருவாதவூரர் திருவெம்பாவையாகப் பாடியிருக்கிறார்.

ஆண்டாளின் திருப்பாவையும் திரு வெம்பாவையும் ஒரே கருத்தில் எழுதப்பட்ட சைவ, வைணவ இலக்கியங்களில் தேனினும் இனிய தீம்பாடல்களில் திருவெம்பாவை, 20 பாடல்களையும் திருப்பாவை 30 பாடல் களையும் கொண்டவை.

சங்க காலத்தில் இருந்ததொரு நிகழ்ச்சி மகளிர் நீராடுகையில் பாவை வடிவ மண்பொம்மை செய்து மலரணிந்து வழிபட்டு வந்திருக்கின்றனர். திருவெம்பாவையின் கருத்துரையை வகுத்த பண்டை நாளைச் சான்றோர் "இது சக்தியை வியந்தது" எனக் குறித்துள்ளார். பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும் என்றும் நாட்டில் வான்மழை பெய்து வளம் பெருகும் என்றும் பாவை வழிபாடு நடத்துவது மரபாக செய்யப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை அக்காலங்களிலேயே தென்னாடு மட்டுமன்றி கீழை நாடுகளுக்கும் கடல் தாண்டிச் சென்று பெண்களால் நோன்பும் வழிபாடும் நடத்தப் பட்டு வருகிறது. திருவெம்பாவையை பாடிய திருவாதவூரர் இதனால் பெருமதிப்பும் பக்தியும் மக்களிடையே பெற்றதனால் ஆங்காங்கே அவரது திருவுருவச் சிலைகள் அமைத்து வைக்கப்பட்டு இருப்பது அவரது அருள் வாசகத்துக்குரிய சான்றாகும். கி.பி பதினோராம் நூற்றாண்டில் திருவொற் றியூரில் எழுந்தருள் வைத்திருப்பதுதான் மிகப் பழமையாகக் கருதப்படுகிறது.

இன்று திருவெம்பாவையின் முதல் வகையைக் காணலாம்.

" ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்

மாதே ! வளருதியோ ? வன்செவியோ நின்செவிதான் ?

மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து

போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்

ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே ! என்னே !

ஈதே எங்தோழி பரிசேலோர் எம்பாவாய் ! எனத் தொடங்கிறது.

வான்தடங்கண் மாதே! என விளிப்பது போல் விழிப்பதற்குத் தோழியர் அழைக் கின்றனர். வாள் போன்று நீண்டு அகன்ற கண்களைக் கொண்ட தோழியென அவளைப் புகழ்ந்து மகிழ்வூட்டி துயிலெழுப் புகிறாள் அழைப்பவள். குழந்தையின், இளம் பருவ வளர்ச்சி உறங்கும்போதுதான் நடக்கும் செயல் எனக் கண்டறிந்துள்ளனர். மொழியில் இக்கருத்துகள் உள்ளபடியே சொற்களாக உருவாகி விடுகின்றன. இறைவன் அருட்பெரும்சோதி! அவன் அடிமுடி அறிய முடியாத எளிமையானவன். அவன் புகழை நாங்கள் பாடி வருகிறோமே அது கேட்க வில்லையா உன் காதுகளில். இரண்டும் உவன்மையான இரும்புக் காதுகளா? என நயமாகக் கடிந்து அழைக்கிறார்கள்.

பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி பஞ்சணையில் இருந்து நழுவி, வெறுந் தரையில் விழுந்து உருண்டு உறங்குகிறாள். அவளைப் பார்த்து "இவள் ஏன் இப்படி விழுந்திருக்கிறாள் தெரியுமா? சிவனின் திருவடிகள் திருவருளைப் பற்றிய பாடல்கள் கேட்டு, வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து, போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன் ஏதேனும் ஆகாள்" எனப் பாடுகிறார். போது என்பது மலரையும் அமளி என்பது படுக் கையையும் குறிக்கும். "காலை அரும்பி பகலெல்லாம் போதாகி" என்பது திருக்குறள் 1227

"அமளி யங்கட்ப் பூவணைப் பள்ளி" என்பது சீவக சிந்தாமணி (1710)

இந்த மலர்ப் படுக்கையில் படுத்தவள் புரண்டு தரையில் விழுந்து கிடக்கிறாள். நம் குரல் வீதி வழியே கேட்டும் விம்மி உருண்டும் உறங்குகிறாள் எனத் தோழியர் கேலி செய்கின்றனர். படுக்கையிலிருந்து கீழே விழுந்தும் அவளுக்கு ஒன்றும் ஆகவில்லை. அப்படியே கிடக்கிறாளே அந்தப் பெண். இந்தப் பெண்ணின் பக்தியே என்ன! எனத் தோழியை எழுப்பித் தயாராகச் சொல்வதாக அமையும் இந்தப் பாடல்.

இறைவன் பிறப்பும் இறப்பும் அற்ற ஒளி வடிவமானவன்; அருட்பெருஞ்சோதி எனத் தொடங்கி திருவெம்பாவை எனும் ஒரு நோன்பு விரதப் பாவை பண்பினைத் தொடங்கி வைத்திருக்கும் நம் மாணிக்க வாசகர் பாடல் நம்மைக் கவர்கிறது.

வளரும்...

1. 23.12.2020 நாளிட்ட உலகத் தமிழ் இணைய இதழ் சிறப்பாக மலர்ந்திருந்தது . மனதிற்குப் பிடித்தமான மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உரை, ஆசிரியம் இன்னும் கட்டுரைகளையும் தாங்கி வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

பாரதியாரின் கனவை நனவாக்குவோம் என்ற தலைப்பில் ஆசிரியம் பகுதியில் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார் ஆசிரியர் அவர்கள்.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நனவாக்கிட தமிழ் வளர்ச்சித் துறை பல நடவடிக்கைகளை எடுத்து வருவது நாம் அறிந்ததே.

தெருக்களில் மட்டுமின்றி வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலும் தமிழே ஒளிர வேண்டும் என டிசம்பர் 23-ஆம் நாள் முதல் 29-ஆம் நாள் வரை ஆட்சி மொழிச் சட்ட வாரம் தமிழகமெங்கும் நடத்தப்பட்டதையும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்படி தொடர் செய்கைகளால் பாரதியாரின் கனவை நனவாக்குவோம்.

.....கவிஞர் பேரா, திருநெல்வேலி.

2. சாண்டா கிளாஸ் பற்றிய அட்டைப்படக் கட்டுரை அருமையான வரலாற்றின் தொகுப்பு. குழந்தையின் விண்ணப்பக் கடிதம் மனதைத் தொட்டது.

..... முனைவர் தேவி நாச்சியப்பன்

3 . இதழில் இடம்பெற்றுள்ள அனைத்து கட்டுரைகளும் அருமை.

.... முனைவர் தனலட்சுமி

4. தகவலுக்கு நன்றி... வ.சுப.மா...துணைவேந்தராக இருந்தபோது எடுத்த நடவடிக்கைகள்.தொடராக வருவது மகிழ்ச்சி..

..... திரு.அழகப்பன், அமெரிக்கா

5. Honey drop from Gabriela Mistral is poetic re-creation. The original perhaps may run as:
Everyday is Children's Day!!

"Let all the rest wait.
Let all considerations be pending.

But,
let not our Kids wait.

Right now their bones metabolize; the cartilage is hardening!

Right now their blood circulates as elixir to gain; right now their senses develop awareness in a faster pace;

can we put off their day now?
Can we delay their play?

Where is room for 'morrow' in their current extending day?
Extending everlong??
-- Gabriela Mistral Mistral writes,

“Many of the things we need can wait. The child cannot. Right now is the time his bones are being formed, his blood is being made, and his senses are being developed. To him we cannot answer, ‘Tomorrow.’ His name is today.”
The Spanish has an ambience interims of gender
The child is 'she' also 'he'.

----- Professor SA Sankaranarayanan,
Kumbakonam.

6. Beautiful words Arul Very well written. Vidya Srinivasan richly deserves it.

..... Mr.Radhakrishnan, Mumbai

அங்கிங்கெனாதபடி இங்கிலாந்தில்...

கவிஞர் புதுயுகன்
இலண்டன்

34

**இல்லக் கதவுக்குள்
சில நேரம் அடைபடுகிறது;
இல்லாத கதவின் வழியாகச்
சில நேரம் விடைபெறுகிறது;
ஒருநாள் கடல் ஆகி
மானுடத்தைக் குனிந்து பார்க்கிறது !**

மேன்செஸ்டர் நகரின் இரயில் நிலையத்தில் இலண்டனுக்கு பயணமாக காத்திருக்கிறார் அந்த ஏழைப்பெண். அரசாங்க உதவித் தொகையில் தான் அவரது வாழ்க்கை ஒடுகிறது.

இரயில் வந்தபாடில்லை. பெற்றோரோ **'கிங்ஸ் க்ராஸ் '** " நிலத்தடி " குழாய் இரயில் நிலையத்தில் முதல்முறையாக சந்தித்து காதலானார்களாம். இந்த எண்ணம் மனதில் ஓட, ஓடாத தனது வாழ்க்கையை எண்ணி நொந்து கொள்கிறார் அந்தப் பெண். பழைய நிலையமான கிங்ஸ் க்ராஸ் நிலையத்தில் கற்பனைச்சுவர் திறவுபட, உள்ளே ' மந்திரவாதிகள் பள்ளி ' ஒன்றிருந்தால் எப்படி இருக்கும் ? மனதில் இது தோன்றுகிற போதே வளைவில் திரும்பி இரயில் விரைந்து வருகிறது. மனித மூளையின் விந்தைக் கதவுகள் பட்டென்று திறக்கின்றன.

"'ஹேரி பார்ட்டர்' தொடர் நாவல்கள் மொத்தமாய் எனது தலையில் அப்போது விழுந்தன"



இந்தச் சம்பவத்தைப் பின்னாளில் இப்படியாக நினைவுகூர்கிறார் அந்தப் பெண். இந்த நாவல்களின் மூலமாக ஏழ்மையிலிருந்து முளைத்து உலகின் முதல் கோடீஸ்வர பெண் எழுத்தாளர் ஆகிறார்.

ஜெ. கே. ரோலிங் ! குழந்தைகளுக்கு ஒரு வசீகரமாக, பெண்களுக்கு ஆதாரமாக, சாதனை விரும்பிகளுக்கு ஆதர்சமாக, உலக வாசகர் களுக்கு புதிய தோரண வாயிலாக ஒருங்கே விளங்குகிறார் இவர்.

சுகாட்லாந்து வேர்களைக் கொண்ட இந்தப் பிரித்தானிய நாவலாசிரியர் இந்த நாவலின் களத்தை அந்த அழகிய தேசத்தைச் சார்ந்தே அமைக்கிறார். பிரம்மாண்ட மலைகளை பெற்ற இயற்கைக் களஞ்சியம் சுகாட்லாந்து. இங்கிலாந் தின் எழுத்தாளர்களுக்கு சவால் விடும் அளவிற்கு சர் வால்டர் சுகாட் போன்றவர்களை கொண்ட எழுத்துச் சுரங்கம்.

மந்திரக் கதைகளை எழுதிய ரோலிங் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னது:

"உலகத்தை மாற்ற மந்திரம் தேவையில்லை. நமக்குத் தேவையான அத்தனை மந்திரச்சக்தி களும் நம்முள்ளே ஏற்கனவே இருக்கின்றன. சிறப்பாக கற்பனை செய்கிற சக்தி நம்முள்ளே தானே இருக்கிறது ! "

"உழன்ற பாதையிலேயே உழலும் போது சாளரங்கள் திறக்கப்படுவதில்லை. கற்பனையால் சாதிக்க இயலாதது எதுவுமே இல்லை. கிழக்கை யும் மேற்கையும் கற்பனையால் இணைக்க முடியும்" தீர்க்கதரிசனம் செய்தாள் இலக்கியம்.

"'Hour' என்ற ஆங்கிலச் சொல்லின் மூலம் 'ஹோரா' என்ற இலத்தீனச் சொல். இந்தச் சொல் சமக்கிருதத் சொல். தமிழும், சமக்கிருதமும் ஆங்கிலத்தையும், ஐரோப்பிய மொழிகளையும் பாதித்ததைப் போலவே, கிழக்கின் குறியீடுகளும் கற்பனைகளும் மேற்கத்திய இலக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன " என்றது தகவல் பிறவி.

"ஆம் ! செண்பகப்பூ, இந்திய மரபு, கிழக்கின் தத்துவம், காஷ்மீர் இவற்றைப் பற்றியெல்லாம் ஷெல்லியும் எழுதியிருக்கிறார். இரவீந்திரநாத தாகூரின் கவிதைகளை, சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் பாரதியார்"

இனி தமிழ் வளர எவை தேவை என்ற கேள்வி எழுந்தது. இலக்கியம் பின்வரும் பட்டியலை வைத்தாள்;

புலம்பெயர்ந்த களங்களின் கதைகள், சவால் களைச் சொல்லும் கவிதைகள், புதினங்கள் ஆகியவற்றை வரவேற்றல் புதிய சமூக மாற்றங் களோடு பயணிக்கிற எழுத்துக்களை வரவேற்றல் ஆய்வுகளோடு தரமான, புதிய வாழ்க்கையைப் பேசுகிற செவ்விலக்கியம் படைத்தல் "இங்கிலாந்திலிருந்து இந்தியா வரை பலவும் கண்டோம். அறிஞர்கள் பலர் எழுதுகிற நல்ல கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் இந்த உலகத்தமிழ் இதழின் வழியாக தங்களை எல்லாம் சந்தித்ததில் மகிழ்ச்சி. எங்களது இந்தப் பயணம் இனிதே நிறைவுறுகிறது".

தகவல், ஊர்ச்சுற்றல் மற்றும் இலக்கியம் என்ற மூன்று உயிர்களும் மீண்டும் என்னுள்ளேயே சென்று அமர்ந்து கொண்டன.

இங்கிலாந்தின் புதிய கிருமி பற்றிய செய்திகள் தாறுமாறாக உலவின. வாழ்க்கை என்னவோ ஒரே மாதிரி தான் இருக்கிறது.

ஒரு மாற்றம் மாத்திரம் உண்டு. தேம்சு நதிக்கரையில் 'பிக் பென்' கடிகார முள் பன்னிரெண்டைத் தொடும் நொடியில் வான வேடிக்கைகளால், கொண்டாட்டங்களால்

இலண்டன் குலுங்கியது. அது 2020 பிறந்த கதைக் கோலாகலமாகப் பிறந்த 2020 கோமாவில் விழுந்தது.

2021 ?

வரவேற்பறை. கடிகாரம். தேதி திசம்பர் 31. மணி நள்ளிரவை நெருங்குகிறது.

'10..9..8..7..6..5..4..3..2..1 '

"உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். அமைதியாகப் பிறக்கும் இந்த 2021 ஆம் ஆண்டு ஒரு மகத்தான ஆண்டாக எல்லோருக்கும் விளங்க எனது மகிழ்வான வாழ்த்துக்கள் !"

(நிறைவுற்றது)

3. MERRY WIVES OF WINDSOR

Sl. No.	Topic	Author	Year	Publication	Mode
1.	Winsarin Innagai Matar	K. Appadurai	1910	Saiva Siddhanta Publication, Madras	Story form
2.	kathal Utal	Anandan	1958	Tamilakam, Madras	Story form

4. TWELFTH NIGHT

Sl. No.	Topic	Author	Year	Publication	Mode
1.	Vayola Carittiram	S.M. Natesa Sastri	1892	K.R. Venkataramaniah Press, Madras	Translation
2.	Ambujavalli or love at first sight	Sri Saila	1906	Sri Vani Vilasini Series, Srirangam	Adaptation
3.	Pannirantam Iravu	K. Appathurai	1910	Saiva Siddantha Publication, Madras	Story form
4.	Mrigathrishnika	S. Rangaswamy Iyer	1911	A.V. Aiyer & Co. Madras	Adaptation
5.	Karuthiyadu Eithiya Kadalar Sarithai	Swami Vibulanandha	1926	Tamil Sanga Muttirasalai, Madurai	Criticism Notes in Mathanga Choolamani
6.	Kalavati	A. Shanmugavelan	1948	Muthu Noolagam, Madras	Adaptation
7.	Pannirantam Iravu	R. Ekambaranathan	1957		Translation
8.	Kanniyin Saagasam	Anandan	1958	Tamilakam, Madras	Story form
9.	Vasigra Vanidai Viola	Jayaseeliammal	1962	Christian Literature Society, Madras	Story form
10.	Pannirantam Iravu	Aru. Ramanathan	1975	Katal Pirasuram	Translation
11.	Pannirantam Iravu	Aru. Somasundaram	1975	Ponmudi Pathipagam, Karaikudi	Translation

அறிவரசன் மொழியாக்கத் துணை அகராதி!

திரு.அறிவரசன், தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புத்துறையில் துணை இயக்குநராக அரும்பணியாற்றியவர். அவர் தொகுத்து வைத்திருந்த அகராதிச் சொற்களை ஒருமுறை சரிபார்த்து, அவர் நினைவாக வெளியிடுகிறோம்.

2

21	Approver	உடந்தையாக மாறிய குற்றவாளி
22	Anaerolic treatment	உயிர்வலி அற்ற வகையில் உயிர் வாழும் நுண்ணுயிர்களைக் கொண்ட குட்டையில் விட்டு தூய்மைப்படுத்துதல்
23	Aerolic treatment	உயிர்வலியைக் கொண்டு வாழும் நுண்ணுயிர்களைக் கொண்டு குட்டையில் விட்டு தூய்மைப்படுத்துதல்
24	Adaptive research	தழுவல் ஆராய்ச்சி
25	Air-conditioned	சீர்வளிச் சாதன அமைப்பு பொருத்தப்பட்ட
26	Air-conditioning	சீர்வளிச்சாதனம் பொருத்துதல்
27	Agricultural labourers	உழவுத் தொழிலாளர்கள்
28	State Agronomic Scheme on Cotton	பருத்தி குறித்த உழவியல் பரிசோதனைக்கான மாநிலத் திட்டம்
29	Acquifer testing	நீர்ப்படுகைச் சோதனை
30	Administrataive Staff college (ASF)	நிர்வாகப் பணியாளர் கல்லூரி
31	Applied Nutrition	சத்தூங்ட உணவு
32	Hon'ble Chief Minister the Pledge	மாண்புமிகு முதல்வர் கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழியை ஏற்கச்செய்வார்
33	Auxiliary-nurse midwife	துணைச் செவிலியர் மருத்துவச்சி
34	Abattoir	ஆடுமாடு அடிக்கும் தொட்டி, இறைச்சி வெட்டும் களம்
35	Abolition of untouchability	தீண்டாமை ஒழிப்பு
36	Amplifier	ஒலிபெருக்கி
37	Applicant Union	மனுக்கொடுத்துள்ள (விண்ணப்பித்துள்ள) சங்கம்
38	Adult literary campaign	முதியோர் கல்வி இயக்கம்
39	Autonomous	தன்னாட்சி உரிமை பெற்ற
40	Austerity	எளிமை

தொடர்புக்கு

ulagathamizh@gmail.com

பார்வைக்கும்... படிப்புக்கும்...

www.facebook.com\ulagathamizh

www.twitter.com#ulagathamizh

www.ulagatamil.in

www.utsmdu.org

ulagathamizh.blogspot.com